
தூய ஆரோக்கிய அன்னை திருவிழா
நவநாள் – 02
செப்டம்பர் 01, 2023
அருள் நிறைந்தவளே!
ஆண்டவரின் அடியவளே!

# அருள் நிறைந்தவளே ஆண்டவரின் அடியவளே!

## அன்பில் இணைவோம்

அருட்பணி: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்
Priest: Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக்கள்: என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்
People: His mercy is everlasting

அருட்பணி: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்.
Priest: Bless the Lord our God
Who sent the Word of life into the World

மக்கள் ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அணைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அணைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக

People: Just is the Lord in all His ways And Holy in all His works
Let every creature praise Him and all living beings bless his name

## அன்னையை புகழ்ந்து பாடுவோம்.

அம்மா உந்தன் அன்பினிலே
அருள்வாய் எமக்க அடைக்கலமே

இறைவன் படைத்த எழிலே
இயேசுவை தந்த முகிலே
தூய்மை பொழியும் நிலவே
துணையே வாழ்வில் நீயே

புவியோர் எங்கள் புகழே
புனிதம் பொங்கும் அழகே
உன் மகன் புதிய உறவில்
எம்மையும் அறியச்செய்வாய்.

### மன்றாடுவோமாக

ஆண்டவரே இறைவா!
உமது அன்பான மீட்புத்திட்டத்தில்
உமது அடியவளாகிய தூய கன்னிமரியாவை
உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின்
தாயாகவும் தோழியாகவும் தேர்ந்தெடுத்தீரே!
அந்தத் தாயின் முன்மாதிரியை தொடர்ந்து பின்பற்றி
உலக மீட்புக்காக முழு இதயத்தோடு பணியாற்ற செய்தருளும்.
உம்மோடு தூய ஆவியின்....

**முன்மொழி:** அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!
அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க

## திருப்பாடலில் செபிப்போம்

**திருப்பாடல் - 9**

1ஆண்டவரே, என் முழு இதயத்தாலும் உம்மைப் புகழ்வேன்
வியத்தகு உம் செயல்களையெல்லாம் எடுத்துரைப்பேன்.
2உம்மை முன்னிட்டு மகிழ்ந்து களி கூர்வேன்.
3உன்னதரே, உமது பெயரைப் போற்றிப் பாராட்டுவேன்.

அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!
அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க

4எதிரிகள் பின்னிட்டுத் திரும்புவார்கள்:
உமது முன்னிலையில் இடறிவிழுந்து அழிவார்கள்.
5நீர் நீதியுள்ள நடுவராய் அரியணையில் வீற்றிருக்கின்றீர்:
என் வழக்கில் எனக்கு நீதி வழங்கினீர்.
வேற்றினத்தாரைக் கண்டித்தீர். பொல்லாரை அழித்தீர்:
அவர்களது பெயர் இனி இராதபடி அடியோடு ஒழித்துவிட்டீர்.

அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!
அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க

6எதிரிகள் ஒழிந்தார்கள்: என்றும் தலையெடுக்கமுடியாமல் அழிந்தார்கள்.
7அவர்களின் நகர்களை நீர் தரைமட்டம் ஆக்கினீர்:
அவர்களைப்பற்றிய நினைவு அற்றுப் போயிற்று.
ஆண்டவர் அரியணையில் என்றென்றும் வீற்றிருக்கின்றார்:
நீதி வழங்குவதற்கென்று அவர் தம் அரியணையை அமைத்திருக்கின்றார்.

அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!
அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க

8உலகிற்கு அவர் நீதியான தீர்ப்பு வழங்குவார்
மன்னளினத்தார்க்கு நேர்மையான தீர்ப்புக் கூறுவர்.
9ஒடுக்கப்படுவோருக்கு ஆண்டவரே அடைக்கலம்.
நெருக்கடியான வேளைகளில் புகலிடம் அவரே.
10உமது பெயரை அறிந்தோர் உம்மில் நம்பிக்கைகொள்வர்:
ஆண்டவரே உம்மை நாடி வருவோரை நீர் கைவிடுவதில்லை.

அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!
அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க

11சீயோனில் தங்கியிருக்கும் ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்:
அவருடைய செயல்களை மக்களினத்தாரிடையே அறிவியுங்கள்:
12ஏனெனில் இரத்தப்பழி வாங்கும் அவர்
எளியோரை நினைவில் கொள்கின்றார்:
அவர்களின் கதறலை அவர் கேட்க மறவார்.

அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!
அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க

[13]ஆண்டவரே, என்மீது இரக்கமாயிரும்:
என்னைப் பகைப்போரால் எனக்கு வரும் துன்பத்தைப் பாரும்.
சாவின் வாயினின்று என்னை விடுவியும்.
[14]அப்பொழுது மகள் சீயோனின் வாயில்களில்
உம் புகழ் அனைத்தையும் பாடுவேன்:
நீர் அளிக்கும் விடுதலைகுறித்து அகமகிழ்வேன்.

**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!**
**அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க**

[15]வேற்றினத்தார் வெட்டின குழியில் அவர்களே விழுந்தனர்:
அவர்கள் மறைத்து வைத்திருந்த வலையில்
அவர்கள் கால்களே சிக்கிக்கொண்டன.
[16]ஆண்டவர் நீதியை நிலைநாட்டுடவதன் மூலம்
தம்மை வெளிப்படுத்தியுள்ளார்:
பொல்லார் செய்த செயலில் அவர்களே சிக்கிக்கொண்டனர்.

**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!**
**அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க**

[17]பொல்லார் பாதாளத்திற்கே செல்வர்:
கடவுளை மறந்திருக்கும் வேற்றினத்தார் யாவரும் அங்கே செல்வர்.
[18]மாறாக வறியவர் என்றுமே மறக்கப்படுவதில்லை:
எளியோரின் நம்பிக்கை ஒருபோதும் வீண்போகாது.

**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!**
**அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க**

[19]ஆண்டவரே எழுந்தருளும்: மனிதரின் கை ஓங்க விடாதேயும்:
வேற்றினத்தார் உமது முன்னிலையில் தீர்ப்புப் பெறுவார்களாக!
[20]ஆண்டவரே, அவர்களைத் திகிலடையச் செய்யும்:
தாம் வெறும் மனிதரே என்பதை வேற்றினத்தார் உணர்வார்களாக!

**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!**
**அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க**

பிதாவுக்கும் சுதனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாகுக
ஆதியிலிருந்தது போல இப்பொழுதும் என்றென்றும் மகிமை உண்டாகுக

**முன்மொழி:** **அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!**
**அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க**

## இறைவார்த்தைக்கு செவிமடுப்போம்

### புனித லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: லூக். 1:39—45

[26]ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள
நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். [27]அவர் தாவீது
குடம்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண
ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா. [28]வானதூதர் மரியாவுக்குத்

தோன்றி, ‘அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்றார்.
29 இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று
எண்ணிக் கொண்டிருந்தார். 30 வானதூதர் அவரைப் பார்த்து, ‘மரியா, அஞ்சவேண்டாம்:
கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். 31 இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்:
அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். 32 அவர் பெரியவராயிருப்பார்: உன்னத
கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை
ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். 33 அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது
என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது’ என்றார்.
34 அதற்கு மரியா வானதூதரிடம், ‘இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!’
என்றார். 35 வானதூதர் அவரிடம், ‘தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின்
வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை
தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். 36 உம் உறவினராகிய எலிசபெத்தும்
தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர்
என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். 37 ஏனெனில், கடவுளால்
இயலாதது ஒன்றுமில்லை’ என்றார். 38 பின்னர் மரியா, ‘நான் ஆண்டவரின் அடிமை:
உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்’ என்றார். அப்பொழுது வானதூதர் அவரை
விட்டு அகன்றார்.

**இது கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி**
**கிறிஸ்துவே உமக்குப் புகழ்..**

## Gospel Reading Lk:1:26-38

26 In the sixth month the angel Gabriel was sent by God to a town in Galilee called
Nazareth, 27 to a virgin engaged to a man whose name was Joseph, of the house of
David. The virgin's name was Mary. 28 And he came to her and said, "Greetings,
favored one! The Lord is with you."[b] 29 But she was much perplexed by his words
and pondered what sort of greeting this might be. 30 The angel said to her, "Do not be
afraid, Mary, for you have found favor with God. 31 And now, you will conceive in
your womb and bear a son, and you will name him Jesus. 32 He will be great, and will
be called the Son of the Most High, and the Lord God will give to him the throne of
his ancestor David. 33 He will reign over the house of Jacob forever, and of his king-
dom there will be no end." 34 Mary said to the angel, "How can this be, since I am a
virgin?"[c] 35 The angel said to her, "The Holy Spirit will come upon you, and the
power of the Most High will overshadow you; therefore the child to be born[d] will be
holy; he will be called Son of God. 36 And now, your relative Elizabeth in her old age
has also conceived a son; and this is the sixth month for her who was said to be bar-
ren. 37 For nothing will be impossible with God." 38 Then Mary said, "Here am I, the
servant of the Lord; let it be with me according to your word." Then the angel de-
parted from her.

**இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்...** (Reflection)

## இறைமக்களின் மன்றாட்டு

**அருட்பணி: நம் உள்ளத்தில் எழும் மன்றாட்டுக்களை நம் ஆரோக்கிய அன்னை வழியில் அன்பர் இயேசுவிடம் சமர்ப்பிப்போம்.**

1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம்: தாய் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் குருக்கள் மற்றும் இறைமக்கள் நமது அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பட்டு எல்லோரையும் மகிழ்விக்கும் நற்செய்தியின் கருவிகளாகத் திகழ்ந்திட ...

**ஆண்டவரின் அடியவளே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம். நமது தலைமை ஆயர் மற்றும் இனையாயர்கள் நமது உயர் மறைமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளி மகிழ்சியிலும் மனநிறைவிலும் நாளுக்கு நாள் வாழ்ந்திட வளர்ந்திட...

**ஆண்டவரின் அடியவளே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காக மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றுபட்டு வாழ்ந்து உலகிற்கு ஒளியாய்த் திகழ்ந்திட...

**ஆண்டவரின் அடியவளே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

4. புனித ஆரோக்கிய அன்னையின் பத்தர்களுக்காக மன்றாடுவோம்: அன்னையைப் போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து வளர்ந்திடவும் நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திடவும் அருள்வேண்டி..

**ஆண்டவரின் அடியவளே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

5. உலக அமைதிக்காகவும், குறிப்பாக இந்தியாவில் குறிப்பாக மனிப்பூரில் அமைதி திரும்பவும், இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் மறுவாழ்வு பெறவும்...

**ஆண்டவரின் அடியவளே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

5. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக ....

**ஆண்டவரின் அடியவளே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

## புனித ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தாயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னி மரியே!
கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீர் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்
நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றிகூருகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும்
நீர் அடைந்த பேரின்பத்தை நாங்களும் அடைய
எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே இரக்கமிக்க அன்னையே!

நீர் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுகின்றவர்களுக்கு
நீர் வாக்களித்துள்ள விசேச உதவியையும் பாதுகாப்பையும்
எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம் திருமகன் இயேசுகிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை
கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்தால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றை பெற்றுத்தந்தருளும்.

**(இங்கு மன்றாட்டுக்களை நினைவிற்கொள்ளவும்)**

இறைவனின் தாயே! இப்பொழுது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கிறோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!

**(௯ முறை அருள் நிறைந்த செபம்)**

நீர் அணிந்திருக்கும் மணிமுடியில்
எம் செபங்கள் அத்தனையும் விண்மீண்களென துலங்குமென
ஆழ்ந்த நம்பிக்கைகொள்கின்றேன்.
வருந்துவோருக்கு ஆறுதலே!
எம் வேளைநகர் ஆரோக்கியத் தாயே!
நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதர்களால் செய்யப்பட்ட
எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான
இயேசு கிறிஸ்துவின் திருஇருதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியோர்களாகிய எங்களது செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

## அருள் நிறைந்த நம் ஆரோக்கிய அன்னைக்கு அஞ்சலி

ஆரோக்கிய மாதாவே-உமது
புகழ்பாடித் துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்.

அலைகள் மோதிடும் கடற்கரை தன்னில்
வசித்திட ஆசை வைத்தாயே
பலவகை கலைகளும் பாரினில் துலங்கிட
அணைவர்க்கும் துணை புரிந்தாயே-2

தேன்கமழும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே


வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே-2

## மன்றாடுவோமாக

பேரிரக்கமுள்ள தந்தையே! நித்திய இறைவா!
உமது மீட்பின் திட்டத்தை தூய கன்னி மரியாவில்
நிறைவேற்றத் திருவுளமானீர்
அவரும் உம் திருமகனின் பலிக்கென
தம்மையே முழுமையாக கையளித்தார்.
உமது மீட்பின் மறைபொருளின்
உண்மையான ஊழியக்காரியாக
அவர் கிறிஸ்துவோடு இணைந்து பணியாற்றிருப்பதால்
அவருக்கு உமது மகத்துவ திருமுன் மதிப்பளித்து
மகிமையின் அரசியாக முடிசூட்டினீர்.
அவரும் கிறிஸ்துவின் திருமுன் எங்களுக்காக
எப்பொழுதும் பரிந்து பேசி மன்றாடுகின்றார்.
நாங்களும் அன்னையைப்போல எளியவாழ்வில்
இறைவனின் பிள்ளைகளாக வாழ அருள்தாரும்
எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக..

## இறையாசீர்

**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அடியவளே!**
**அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க**



**Velankanni Community of Southern California**
**Divine Saviour Catholic Church**
**610 Cypress Ave, Los Angeles CA 90065**